
# அம்மா ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# திருமதி. பரமேஸ்வரி கதிரவேற்பிள்ளை

தோற்றம்
13
-
06
-
1927



மறைவு
08
-
01
-
2003

## அன்னையை வேண்டுகிறோம்....

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.
பண்ணிய பாவமெல்லாம்
பரிதிமுன் பனியே போல,
நண்ணிய நின்முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய் !

*-பாரதியார்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அம்மா...

மூன்று எழுத்துக்களைக் கொண்ட வெறும் வார்த்தையா அது?

இல்லை! அன்பு, பாசம், கனிவு, இரக்கம், தயை, இனிமை என எல்லா நற்குணங்களின் இயல்புகளையும் உள்ளடக்கிய உருவமல்லவா அது. எல்லா உயிர்களினதும் கருவாக, உருவாக ஆதாரசக்தியாக விளங்குவதும் அம்மாதானே!

தாய்ப்பாசத்தை உணராதவர்கள் யார்தான் இருக்கிறார்கள்? தாயின் பாசம் வலுவானது, தன்னலங் கருதாதது. எங்கள் அம்மாவும் அப்படித்தான். உணவோடு பாசத்தையும் தன் நற்குணங்களையும் எமக்கு ஊட்டி வளர்த்தார். பிள்ளைகளாகிய எங்களை மாத்திரமல்ல மருமக்கள், பேரக்குழந்தைகள், பீட்டக் குழந்தைகள், சகோதரங்கள், உற்றார் உறவினர்கள் அக்கம் பக்கத்திலிருந்தோர் என எல்லோரையும் நேசித்து , எவருக்கும் துன்பம் வரக்கூடாது என இறைவனை யாசித்தவர் அவர்.

அம்மா பற்றிய எமது எண்ணங்களையும் உணர்வுகளையும் எங்களால் வார்த்தைகளில் வெளிப்படுத்திவிட முடியாது. கருணைக்கடலான அவர்முன் எங்கள் மொழிவளம் வலுவிழந்துவிடும். அவரை எங்கள் உள்ளத்துள் சிறைப்பிடிக்க முடியுமேயன்றி வார்த்தைகளால் சிறைப்படுத்துவது இயலாத காரியம் என்பதை நன்றாகவே உணர்கின்றோம். எனவேதான் அம்மா பற்றி கவிஞர்களும் , சிறுகதையாசிரியர்களும், சமயப் பெரியோர்களும் கூறிய நல்வார்த்தைகள் சிலவற்றைத் தொகுத்து அம்மாவின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

சிறுவர் பாடல் முதல் சிறுகதை, கட்டுரை, கவிதை, சான்றோர் கூற்று, உண்மைச்சம்பவம் எனப்பலவற்றை தொகுத்துள்ளோம். குழந்தைகள் முதல் முதியோர் வரை பலருக்கும் இது பயன்படுவது எமது அம்மாவின் ஆத்மசாந்திக்கு வழிவகுக்கும் என நம்புகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் இடம்பெற்றுள்ள ஆக்கங்களை ஆக்கியோருக்கும், அவற்றைச் சேகரிப்பதில் உதவிய வணக்கத்திற்குரிய சுவாமி சித்ரூபானந்தா, மற்றும் நண்பர்களான டாக்டர் இராஜேந்திரா, நீர்வை பொன்னையன், வ.இராசையா, தெளிவத்தை ஜோசப் ஆகியோருக்கு எமது நன்றிகள்.

இந்நூலுக்கென "அம்மா" என்ற சிறப்புக் கட்டுரையை குறுகிய காலத்தில் எழுதி உதவிய எமது உறவினரும், இளைப்பாறிய கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபருமான திரு வை.கா.சிவப்பிரகாசம் அவர்களுக்கும், நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ( **S** ) பிறின்ட் ,ஏ.எஸ்.சற்குணராஜா அவர்களுக்கும் எமது நன்றிகள்.

**ஜெய் சாயி ராம்.**

மு.கதிரவேற்பிள்ளை (கணவர்)
***பிள்ளைகள்***
டாக்டர் எம்.கே.முருகானந்தன்,
ச.பங்கயற்செல்வி,
து.பாலசௌந்தரி,
க.மகேஸ்வரன்,
க.மனோகர்.

வியாபாரிமூலை,
பருத்தித்துறை.
07.02.2003.

***தற்காலிக முகவரி:***
13.C, பஸல்ஸ் லேன்,
வெள்ளவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

-வை. கா. சிவப்பிரகாசம்-

**அ**...ம்....மா என்ன அற்புதமான சொல்! இனம், மொழி, மதம் என்ற பேதங்களை எல்லாம் கடந்த நல்ல பண்புகளின் உருவமே அம்மா. அந்த உருவத்தை 'மம்மி' என்பார்கள் சிலர் . பாசமிகுதியால் 'மம்' என்று சுருக்கிக் கூறுவார்கள் பிள்ளைகள். 'உம்மா' என்பார்கள் ஒரு பிரிவினர் அம்மே என்பார்கள் இன்னொரு பிரிவினர் ஏன்? உயிரினங்களில் பசுவும் '..ம்..மா' என்று தானே கத்தும்.

அம்மா என்ற அன்புத் தத்துவத்தைக் குறிக்கத் தமிழில் அன்னை, அஞ்ஞை, தாய், மாதா என்ற சொற்கள் இலக்கிய வழக்கில் உள்ளன. பாமரமக்கள் பேச்சுமொழியில் ஆயா, அம்மே, அம்மோய் என்று தாயை அன்போடு கூறுவார்கள்.

பழைய காலத்தில் பெற்ற தாயை '**நற்றாய்**' என்றும், தினசரி ஆவன செய்து வளர்க்கும் தாயை அல்லது வளர்ப்புத்தாயை '**செவிலித்தாய்**' என்றும் சொல்லும் வழக்கம் இருந்தது!

**பழந்தமிழ் இலக்கியத்தில் தாய்..**

அம்மா என்ற அன்புத் தத்துவத்தில் அடங்கியுள்ள கூறுகள் பல. பிள்ளைகளின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் கண்ணும் கருத்துமாய்ப் பணிபுரிபவளே அம்மா. தாயின் பராமரிப்புக் கடமையை

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே"**

என்றாள் பழந்தமிழ்த்தாய்.

பிள்ளைவளர்ப்புக்கலையில் சிறந்து விளங்கும் தாய் தன் பிள்ளைகள் கல்வியினால் உயர்ந்து வைத்திய கலாநிதியாகவோ பொறியியலாளராகப் பேரோடும் புகழோடும் வாழும்போது அடையும் மகிழ்ச்சிக்கு நிகராக எதனையும் சொல்ல இயலாது.

**'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் திருவள்ளுவர். வள்ளுவரின் வாய்மொழிக்கு உதாரணமாக ஒரு தாயைச் சொல்லவேண்டும் என எண்ணும்போது பரமேஸ்வரி அக்காவின் ஞாபகம் தான் எனக்கு வருகின்றது.

கல்வியில் மட்டுமல்ல தியாகவீரத்திலும் பிள்ளைகள் பெயர் பெறுவதைக் கேட்கும்போது தாய் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

''**ஈன்ற பொழுதினும் பெரிது உவந்தனனே**'' என்று பாடிய நற்செள்ளையாரும் தாயின் மகிழ்ச்சியைக் கணித்துள்ளார்.

**அன்னையின் குணம்..**

தாயின் குணங்களில் உன்னதமானது இரக்கம், ''அன்னை தயையும்'' என்ற கவித்தொடர் ஒரு நல்ல தாயின் இரக்கத்தை மெச்சுகின்றது. தயை என்று கூறும் போது நமது முன்னோர் அதனை எட்டு எனவும் பதினான்கு எனவும் தொகைப்படுத்திக் கூறிய அருமை என் நினைவுக்கு வருகின்றது.

**எண்வகைத்தயாவிருத்தி :**

1.பிறர்க்குப் பொருள் வருதலை அறிந்து உவத்தல்

2.பிறர் செல்வம் பொறுத்தல்

3.பிறர் கருமத்திற்கு உடன்படல்

4.தீமைக்கு அஞ்சல்

5.பிறர் கருமம் முடிக்க விரைதல்

6.பிறர் ஐயம் தீர்த்தல்

7.நன்மை கடைப்பிடித்தல்

8.பிறர் துயர்க்கு இரங்கல்

**பதினான்கு வகைத் தயா விருத்தி :**

*உபகாரம் 7 ( உயிர்க்கு)*

1.கல்வி பயிற்றல்
2.துயர் தீர்த்தல்
3.தண்டத்தின் நீக்கல்
4.ஐயம் தேற்றல்
5.பிறர் குணத்தை அழுக்காறு இன்றிப் பொறுத்தல்
6.பிறர் தீமை மறந்து நன்மையே நினைத்தல்
7.பிறர்க்கு வேண்டித் தெய்வம் வழிபடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உபகாரம் 7 (உடலுக்கு)*

1.அன்னம் வழங்கல்
2.பானம் உதவல்
3.உடை அளித்தல்
4.இடம் வழங்கல்
5.அடிமை காத்தல்
6.சிறைநோய் தீர்த்தல்
7.பிணமடக்கல்

இரக்கத்தின் வளர்ச்சியைக்குறிக்கும், முற்கூறிய செயல்களிற் சில இக்காலத்தில் விவாதத்துக்கு உரியன. ஆயினும் இரக்கம் அல்லது தயை என்ற நற்குணம் பல நல்ல செயல்கள் மூலம் வளருவது என்று சொல்வதில் தவறு இல்லை. ஒரு நல்ல தாயிடம் இயல்பாக இருக்கவேண்டிய நல்ல செயல்கள் எல்லாம் ஒருங்கே அமைந்தவர் ''அம்மா'' என்ற பதத்திற்கு உத்தம உதாரணமாகக் கூறக் கூடிய பரமேஸ்வரி அக்கா. அவரின் உருவமே நற்பண்புகளின் உறைவிடம்.

ஒரு நல்ல தாயின் குணாதிசயங்களை நமது முன்னோரின் அனுபவச்சாரமான பழமொழிகள் பலபடக் கூறியுள்ளன. பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமான தாய்ப்பால் ஊட்டல், நல்ல உணவளித்தல், பட்சவேறுபாடு காட்டாமை என்னும் தாயின் நற்பண்புகளை,

''தாயர் அவைத்துப் பால் பெய்துவிடல்''(பழமொழிநானூறு 364)
''தாயை மறக்கடிக்கும் தயிரும் பழஞ்சோறும்''(பழமொழிநானூறு 364)

தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு (பழமொழிநானூறு 333) என்னும் கூற்றுக்கள் அழுத்தமாகக் கூறுகின்றன.

''கோனோக்கி வாழுங் குடியெல்லாம் தாய்முலையின்
பானோக்கி வாழும் குழவிகள்'' (நான்மணிக்கடிகை : 28)
என்ற பாடற்பகுதி தாய்-சேய் ஒட்டுறவை வலியுறுத்துகின்றது.

**சமயத்தில் அம்மா...**

தாய் என்ற தத்துவத்தில் சமயத்தின் செல்வாக்கு இருப்பதை மறக்க முடியுமா? தொல்பழங்காலத்தில் தாய்வழிபாடே சிறப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்று விளங்கியது. அம்மன், அம்பாள், அம்மை, மாதா என்ற சொல்வழக்குகள் தாய்த்தெய்வ வழிபாட்டைக் குறிக்கின்றன. மனித இனப் பெண்களில் ஆன்மீகமார்க்கத்தில் உன்னதநிலை அடைந்தவர்களை அம்மா, அம்மை, மாதாஜி என்று கூறுவதும் நமது பண்பாட்டில் ஒரு முக்கிய வழக்கமாக உள்ளது. சிவபெருமான் ''இவள் நம்மைப் பேணும் அம்மைகாண்'' என்று பார்வதிதேவிக்குக் கூறிய காரணத்தினால் புனிதவதி 'காரைக்காலம்மையார்' ஆனார் அல்லவா!.

**சமூகத்தில் அம்மா...**

தாய் என்ற தத்துவத்தில் சமூகத்தின் செல்வாக்கு காணப்படுவதையும் நாம் மறக்க முடியாது. மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய பெண்மணியை அன்னை என்றோ அம்மையார் என்றோ கூறுவது இன்றும் போற்றப்படும் ஒரு சமூக வழக்கம் ஆகும். அன்னை தெரேசா, இந்திராகாந்தி அம்மையார் என்று பலரும் கூறுதலை யார் தான் மறக்க முடியும்.

தாய் என்ற தத்துவத்தில் குடும்பத்தின் செல்வாக்கும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இல்லத்தரசியாக வாழும் இளம்பெண் கணவனால் ''அம்மா'' என நடுத்தரவயதையடுத்து மரியாதையாகக் கூறப்படுதல் இக்கால வழக்கம்.

தாய் என்ற தத்துவத்தில் அடங்கியுள்ள சிந்தனைகளை ஒரு சேரத்தொகுத்துக் கூறும் முறையில் 'கொன்றைவேந்தன்'

''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்''
''தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை''

எனக்கூறியுள்ள முதுமொழிகளை யார்தான் மறக்க முடியும்?

ஒருவனை நன்றாக வளர்த்து அவன் உயர்ந்த நிலை அடைவதற்குக் காரணமாகவோ பக்கபலமாகவோ விளங்கும் தாயை நிந்திக்கும் வகையில் இன்று,

''அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல்''

என்ற ஒரு புதுமொழி சில வட்டாரங்களில் வழங்குகிறது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசபிதா ஆகவோ, ஒரு சாம்ராஜ்யத்தின் பாதுஷா ஆகவோ, ஒரு மாபெருந்தளபதி ஆகவோ, ஒரு சிந்தனை வளம் மிக்க தத்துவஞானி ஆகவோ புகழேணியின் உச்சியை அடைந்த ஒவ்வொரு மனிதனும் ஒரு தாய்க்குப்பிள்ளை தானே! மகாத்மா காந்தி, முகலாய பாதுஷா, ஐசனோவர், ஆதிசங்கரர் ஆகியோர் தாம் பெற்ற உயர் நிலைக்கு ஆதாரமான தாயை வந்தனை செய்தார்களே தவிர, நிந்தனை செய்யவே இல்லை. இந்த மனப்பான்மையை அழுத்தும் வகையில்,

''டில்லிக்கு பாட்சாவானாலும் தல்லிக்குப் பிள்ளை தானே'' என்ற கலப்புமொழிப் பழமொழி ஆணித்தரமாகத் கூறுகின்றது.

**நவீன தமிழ் இலக்கியத்தில் அம்மா..**

நவீன தமிழ் இலக்கிய வகைகளில் தாய்பற்றிய கதைகள், கவிதைகள், கடிதங்கள் என்பன சிறப்பிடம் பெற்றுள்ள அருமையை இலக்கியப்பிரியர்கள் அறிவர். ரஷ்யமொழியில் மாக்சிம்கோர்கி எழுதிய ''Mother'' என்னும் நாவல் ''தாய்'' என்ற பெயரில் தமிழ்வடிவம் பெற்றுள்ளமையை நாவல் வாசகர்கள் பலர் அறிவர். தமிழில் தி.ஜானகிராமன் படைத்த 'அம்மா வந்தாள்'. என்பது நல்லதொரு நாவல் ஆகும். மு.வ எழுதிய ''பெற்ற மனம்'' குறிப்பிடத்தக்க மற்றொரு தமிழ் நாவல் எனலாம். ''அன்னைக்கு'' என்ற பெயரில் மு.வ எழுதிய கடிதவகை இலக்கியம் ஒரு கருத்துக் களஞ்சியம் என்பதைப் பலவாசகர் அறிந்திருப்பர்.

**சினிமாவில் அம்மா...**

இருபத்தோராம் நூற்றாண்டு தொடங்கும் வரை தமிழ்ச் சினிமாத்துறை தமிழ்மக்களின் எண்ணம், சொல், செயல் என்பவற்றில் செலுத்திய ஆதிக்கத்தை எல்லோரும் புரிந்துகொள்ளுவார்கள். இத்தகைய முறையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப்பேசும்படங்களிலே 'தாய்' பற்றிய சிந்தனைகளும் முக்கியத்துவம் பெற்றதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ''தாய் சொல்லைத் தட்டாதே'', தாயின் மேல் ஆணை'', ''பெற்றமனம்'', தாய்க்குப் பின் தாரம்'', பெற்றமகனை விற்ற அன்னை'', ''அன்னை ஓர் ஆலயம்'' என்பன குறிப்பிடத்தக்க சில படங்கள் ஆகும்.

தமிழ்ச்சினிமாத்துறையில் வசீகரமான பாடல்கள் இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராயத்தினரைக் கவர்ந்து விடுவதை நிதர்சனமாக அறிகிறோம். அவற்றின் வித்தியாசமான திரைப்பாடல்களிலே 'தாய்' பற்றிய கருத்துச் செறிவுள்ள பாடல்களும் அடங்குகின்றன. ''மாதா பிதா குரு தெய்வம்'', ''அம்மாவே தெய்வம் உலகினிலே'', ''பத்து மாதம் சுமந்து இருந்து பெற்றாள்'', ''தாய் மனசு தங்கம்'', ''அன்னைஓர் ஆலயம்'', ''தாயில்லாமல் நானில்லை'', ''அம்மா என்றழைக்காத உயிரில்லையே..'' என்ற பாடல்களை மறக்காதவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

**குழந்தை இலக்கியத்தில் அம்மா...**

குழந்தை இலக்கியம் இப்போது தமிழில் புதிய வளர்ச்சிப் பரிமாணங்களைப் பெற்றுள்ளது. அந்த வகையில் அழ வள்ளியப்பா, குழந்தை கதிரேசன், தில்லைச்சிவன், திமிலை மகாலிங்கம், வேந்தனார், யாழ்ப்பாணன், த.துரைசிங்கம் போன்றவர்கள் படைத்த பாலர் பாடல்களிலே அம்மா பற்றிய சிந்தனைகள் காணப்படுகின்றன.

**நாட்டார் இலக்கியத்தில் அம்மா...**

பாமரமக்கள் வளர்த்த வாய்மொழிப் பாடல்களிலே தாலாட்டுப் பாடல்கள் தாயின் அன்புள்ளத்தை நாட்டார் இசைச் சுவையோடு சித்திரிக்கின்றன. நாட்டார் கதைகளில் தாய்பற்றிய சிந்தனைகள் கருப்பொருளாக இருப்பதையும் அறிய முடிகிறது. இறுதியாக சுருங்கச் சொன்னால் பாமரர் தொடக்கம் பண்டிதர் வரையில் உள்ளோர், தொழிலாளி தொடக்கம் முதலாளி வரையில் உள்ள மக்கள் பிரிவினர் , பட்டிக்காடு தொடக்கம் பட்டினம் வரையில் உள்ள இடங்களில் வாழ்கின்ற மக்கள் எல்லோருமே அம்மாவின் தியாகம், பாசம், ஆதரவு போன்ற குணாதிசயங்களால் உருவானவர்களே. அத்தகைய ஒரு தாயின் பிள்ளைகளாகப் பிறக்கும் அனைவரும் அதிஷ்டசாலிகளே.

அம்மா பற்றிய இந்தச்சிற்றுரை பரம ஐஸ்வரியங்களும் பெற்று நிறை வாழ்வு வாழ்ந்த பண்புநலங்களின் உறைவிடமாய்க் கடைசிவரை விளங்கிய பரமேஸ்வரி அக்காவிற்கு புனித நினைவுகளோடு சமர்ப்பிக்கப்படுகின்றது.

துன்பம் தீர்வது பெண்மையினாலடா!
சூரப்பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்''

[மகாகவி பாரதியார் -பெண்மை :2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு I

**பழமொழிகளில் தாய்**

1. ''தாய்க்கு மக்களுள் பக்கமோ வேறு''
2. ''தாய் மிதித்த ஆகா முடம்''
3. ''தாயர் அவைத்து பால்பெய்துவிடல்''
4 ''மகன் மறையாத் தாய் வாழுமாறு''

(பழமொழிநானூறு 333,354,364)

5. ''தாய்க்கு விளைந்தாலும் தனக்கு விளையவேண்டும்''
6. ''கற்றவனும் உண்பான் பெற்றவளும் உண்பாள்''

((முத்தப்பர் தொகுப்பு 19ஆம் நூ)

7. ''தாய் முலையின், பானோக்கி வாழும் குழவிகள் எல்லாம்

(நான்மணிக்கடிகை-28)

8. தாய்க்கும் ஒளித்த சூலோ -தையால் (மனோன்மணியம்)
9. ''தாய் முகம் பார்க்கும் சேய் போல''
10. ''தாயை மறக்கடிக்கும் தயிரும் பழஞ்சோறும்''
11. ''ஒரு பிள்ளை பெற்றவளுக்கு உறியிலே சோறு
    நாலுபிள்ளை பெற்றவளுக்கு நடுத்தெருவிலே சோறு''
12. ''பெற்றமனம் பித்து பிள்ளை மனம் கல்லு''
13. ''தாயும் பிள்ளையும் (ஒன்று) என்றாலும் வாயும் வயிறும் வேறு''
14. ''தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை''
15. ''எங்க அம்மா அம்மா உங்க அம்மா சும்மா''.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மா

*- க. வேந்தனார் -*

காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா.

புழுதி துடைத்து நீரும் ஆட்டிப்
பொட்டு வைக்கும் அம்மா
அழுதி டாமல் பள்ளிக் கூடம்
அடையச் செய்யும் அம்மா.

கட்டி அணைத்து மடியில் வைத்துக்
கதைகள் சொல்லும் அம்மா
சட்டை அணிந்து செருப்பும் மாட்டித்
தலையும் சீவும் அம்மா

அள்ளிப் பொருளைக் கொட்டிச் சிந்தி
அழிவு செய்த போதும்
பிள்ளைக் குணத்தால் செய்தான் என்று
பொறுத்துக் கொள்ளும் அம்மா.

பாப்பா மலர்ப்பாட்டை நானும்
பாடி ஆடும் போது
வாப்பா இங்கே வாடா என்று
வாரித் தூக்கும் அம்மா.

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத் தூக்கித்
தோளில் போடும் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா

-திமிலை மகாலிங்கம்-

அம்மா எங்கள் அம்மா
அனைத்தும் தருவார் அம்மா
தம்மைத் தியாகம் செய்து
தாமே எம்மைக் காப்பார்.

பத்து மாதம் சுமந்து
பாலும் தேனும் உவந்து
சத்து உணவும் தந்து
தாமே எம்மை வளர்த்தார்.

தத்தித் தத்தி நடக்க
தாவி ஓடி நடக்க
சத்தம் போட்டுப் பேச
தந்த தெல்லாம் அம்மா

உண்ண நல்ல உணவு
உறங்கும் போது தினமும்
சின்னக் சின்னக் கதைகள்
செவிகள் குளிரத் தருவார்

சட்டை சொக்கா போட்டு
தங்க நிலவு காட்டி
சுட்டிக் காத்த அம்மா
காலடிகள் பணிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தெய்வம்

*-அழ. வள்ளியப்பா-*

அம்மா, அம்மா வருவாயே
அன்பாய் முத்தம் தருவாயே,
அம்மா உன்னைக் கண்டாலே
அழுகை ஓடிப் போய்விடுமே !

பத்து மாதம் சுமந்தாயே
பாரில் என்னைப் பெற்றாயே
பத்தி யங்கள் காத்தாயே.
பாடு பட்டு வளர்த்தாயே.

அழகு மிக்க சந்திரனை
ஆகா யத்தில் காண்பித்தே
பழமும் பாலும் ஊட்டிடுவாய்
பாட்டும் கதையும் கூறிடுவாய்.

தமிழைக் கற்றுத் தந்திடுவாய்
'தத்துப் பித்' தெனப் பேசிடினும்
அமுதம், அமுதம் என்றிடுவாய்
அனைத்து முத்தம் தந்திடுவாய்.

எனக்குச் சிறுநோய் வந்தாலும்,
ஏனோ மிகவும் வருந்துகிறாய்!
உணவும் இன்றி உறங்காமல்
உயிர்போல் என்னைக் காக்கின்றாய்!

உன்னைப் போலே வளர்த்திடுவோர்
உலகில் உண்டோ வேறொருவர்?
என்னைக் காக்கும் அம்மாவே,
எனக்குத் தெய்வம் நீ தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா மகிழ வாழ்வோம்

*-தில்லைச் சிவன்-*

பத்துத் திங்கள் வயிற்றுள் சுமந்து
பெற்று எடுத்தவராம்
மெத்தக்கவன மாக எம்மைக்
காத்து வளர்த்தவராம்

பழவகை ஊட்டச் சத்துள்ள உணவும்
பாலும் தந்தவராம்
அழகான சட்டைகள் தைத்துப்போட்டு
அழகு பார்த்தவராம்

''படிபடி'' என்று ஊக்கம் தந்து
பள்ளிக்கு வைத்தவராம்
கடிதான கல்வியைக் கற்றுத் தெளியக்
கண்டு மகிழ்ந்தவராம்.

ஆடி ஓடி விளையாடப் பார்த்து
அகம் மிக மகிழ்வாராம்
கூடியாடுஞ் சிறார்க்குஞ்சிற் றுண்டி
கொடுத்து மகிழ்வாராம்.

பெற்ற அம்மா எம்மேல் வைத்த
பேரன்பால் மேன்மேலும்
கற்றுக் கசடு நீக்கிநாம் வாழ்ந்தால்
கண்டு அவர் மகிழ்வாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு நிறைந்த அம்மா

-கூடல்நாடன்-

அன்பு நிறைந்த அம்மா
அருமை யான அம்மா
இன்ப மாக எம்மை
இதமா யணைக்கும் அம்மா

எமது நோய்க்குத் தானே
ஏற்ற மருந்தை உண்பார்
எமது மகிழ்ச்சி கண்டே
என்றும் மகிழும் அமமா

அழுது சோற்றை உண்ண
அடம்பி டித்த போது
நிழலை நீரிற் காட்டி
நினைந்து சிரிக்கும் அம்மா.

நல்ல கதைகள் சொல்லி
நன்றாய் உணவை ஊட்டி
மெல்லத் துயில வைக்கும்
மேன்மை உடைய அம்மா.

கண்ணைக் காக்கும் இமையாய்
கவனித் திருக்கும் அம்மா
பெண்கள் பெருமை பெரிதாய்ப்
பேச நிற்கும் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை

-கவிஞர் வாகரைவாணன்-

அன்னை எங்கள் அன்னை
அன்பு கொண்ட அன்னை
என்னைப் பெற்று வளர்த்த
இனிமையான அன்னை

நாளும் உணவு தருவாள்
நல்ல கதைகள் சொல்வாள்
வாழும் வழிக ளெல்லாம்
வடிவாய்ச் சொல்லித் தருவாள்

பையப் பாட்டுப்பாடி
பாசமெல்லாம் காட்டி
கையால் என்னைத் தடவி
கண்ணு றங்கச் செய்வாள்

பாடம் சொல்லித் தருவாள்
பள்ளி செல்லும் போது
கூடத் தானும் வந்து
கொஞ்சி என்னை விடுவாள்

பூக்கள் போட்ட சட்டை
புதிதாய் வாங்கித் தருவாள்
ஆட்கள் எல்லாம் பார்த்து
ஆசை கொள்ளச் செய்வாள்

சின்னச் சின்னப் பூக்கள், 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

-அம்பி-

ஈரைந்து மாதங்கள் எம்மைச் சுமந்ததில்
இன்பம் அடைபவள் தாய்.
நேரந் தெரிந்தெமை நித்தமும் பாலூட்டி
நெஞ்சில் உறைபவள் தாய்.

ஊணும் உறக்கமுந் தான்மறந் தேபேணும்
உத்தமி யாளெங்கள் தாய்.
காணுஞ் சுகங்களைக் காணிக்கை வைத்தெமைக்
காத்து வளர்ப்பவள் தாய்

துன்பந் துடைத்துளத் தூய்மை வளர்த்திடும்
சோதிச் சுடரெங்கள் தாய்
இன்ப சுகந்தரும் அன்புக் களஞ்சியம்
இவ்வுலகில் எங்கள் தாய்.

நோயில் துடிப்பினும் பாயிற் படுப்பினும்
நித்தம் உழைப்பவள் தாய்.
தாயிற் சிறந்தொரு கோயிலில் லையெனும்
சால்பில் உயர்ந்தவள் தாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்ததற்காய்....

*-அன்பு முகையதீன்-*

மறந்து நான் போனேன் உம்மா
மன்னிக்கவேண்டும்! என்னை

தங்கச்சி வந்து மிக்க
தயவாக என்னைப் பார்த்து
'இன்றுடன் உம்மா மௌத்தாகி
எட்டாண்டு காக்கா" என்றாள்.
சொல்லிய போதே அந்தச்
சோகத்தை முகத்தில் பார்த்தேன்.

தங்கச்சி நிதமும் உன்னை
தவறாமல் நினைத்துப் பார்ப்பாள்

இடையிடையே குர்ஆனை
எடுத்தவள் உனக்காய் ஓதி
சமர்ப்பணம் செய்வாள் உள்ளச்
சாந்தியை அதிலே காண்பாள்.

மறந்து நான் விட்டேன் உம்மா
மன்னிக்க வேண்டும்! என்னை.

உன்னோடு வாழ்ந்த போது
உயிராக எனை மதித்தாய்
பிரச்சினை வரும்போதெல்லாம்
பேசாமல் தீர்த்து வைத்தாய்

தனித்துநான் போன தாலே
தலை கொள்ளா வேலை உம்மா!

பிள்ளைகள் தொல்லை இன்னும்
பிரயாணம் எழுத்து வேலை
இதற்குள்ளே மாட்டிக் கொண்டு
எதிர்நீச்சல் போட வேண்டும்.

நேரம் கிடைத்தால் உன்னை
நினைத்து நான் அழுவதுண்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தை வேண்டி உள்ளம்
பரிதவிக் கின்ற போது
ஆசையாய்க் கரத்தை நீட்டி
அணைத்து நீ வளர்த்த அந்த
நேசத்தை எண்ணி எண்ணி
நெஞ்சுக்குள் மகிழ்வதுண்டு

இறந்த நாள் மறந்து உம்மா
இருந்துநான் விட்டேன் இனியும்
மறந்து நான் வாழமாட்டேன்.
மன்னிக்க வேண்டும் உம்மா.

*-மல்லிகை 35 ஆண்டுமலர் 2000-*

## செல்ல அம்மா

*-குழ. கதிரேசன்-*

அன்பு மழை பொழிகிறாள்
அன்னை இவள் அல்லவா!
கொஞ்சு மொழி மொழிகிறாள்
குழந்தை நானும் அல்லவா!

அடம் பிடிக்கும் போதிலும்
அடித்தி டாமல் இருக்கிறாள்.
அடங்கி டாத போதிலும்
அன்பாய் அடக்கி வைக்கிறாள்

சுட்டித் தனங்கள் செய்கையில்
தூணில் கட்டி விடுகிறாள்.
கட்டை அவிழ்த்து விடுகையில்
கட்டி முத்தம் தருகிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்க்கையை நெறிப்படுத்திய அம்மா

*-டொமினிக் ஜீவா-*

என்னுடைய வாழ்க்கையை நெறிப்படுத்தியதில் என்னுடைய தாயாருக்கும் பெரும் பங்குண்டு. அதிகம் படிக்காதவர். ஆனால் கேள்வி ஞானம் நிரம்பப் பெற்றவர். நியாய, அநியாயங்களின் தராதரம் அறியத்தக்கதான நுண்மையான இயல்பு அறிவு பெற்றவர். 'பொடியா.... பொடியா.....' என என்மீது அபாரமான வாஞ்சை கொண்டவர்.

இளந்தாரிக் காலத்தில் நான் கூட்டங்களுக்கு இரவிரவாகச் சென்று விட்டு வீடு திரும்பிய சமயங்களில் பனிக்குளிருக்குள் கூனிக் குறாவிக் கொண்டு , அரிக்கன் லாம்பை வெளிச்சம் குறைத்து வைத்துக்கொண்டு , இரவுச் சாப்பாட்டை மூடிவைத்துவிட்டு நான் வரும்வரை காவலிருந்தவர். ''ஏனணை நீ முளிச்சுக் கொண்டிருக்கிறாய்? சாப்பாட்டை மூடி வைத்துவிட்டு படுக்கலாம்தானே?'' எனக் கேட்டால் , ''மனசு கேட்கல்லைப் பொடியா, ரா இருட்டியிலை நீ வந்து சேரேக்கை குடிக்கத் தண்ணி கிண்ணிக்குக் கஷ்டப்படுவாய். பரவாயில்லை நீ கையைக் கழுவிப்போட்டு வந்து சாப்பிட்டிட்டுப் படு!'' எனத் தாய்மைப் பரிவுடன் அவர் சொல்லும்போது நெஞ்சு அப்படியே உருகும்.

அவரது மரணம் எனக்கொரு பெரிய அதிர்ச்சி. அவரது பிரிவைப்பற்றி மல்லிகை இதழிலும் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். பலர் அதைப்படித்துவிட்டுத் துக்கம் விசாரித்தனர். அப்படிப்பட்ட பாசம் உள்ளவர். தாய்மை என்பதே அற்புதம்தான்.

அம்மா இரவிலே ரொம்பச் சோக்கான கதைகள் சொல்லுவார். சிலதை இட்டுக் கட்டியும் சொல்வார். கேட்கக் கேட்க அந்த வயசுக்கு பெரிய ரஸனையாயிருக்கும். அநேகமாக நீதி போதனைக் கதைகள்தான் அதிகம். நம்பும்படியாகவும் கதைகள் இருக்கும். அவர் அன்று விதைத்த விதைதான் பிற்காலத்தில் என்னை எழுத்தாளனாக்கியதோ என யோசிக்கும் வேளைகளில் நான் நினைத்துப் பார்ப்பதுண்டு.என்னை கொஞ்சம் கொஞ்சமாக ச் செதுக்கிச் செப்பனிட்டு வைத்தவர் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவிற்கு பிறந்த ஊரான சரவணையிலே நெல்வயல்கள் இருந்தன. பக்கத்தே சின்ன மடுமாதா கோயிலும் இருந்தது. சீதன வயல்கள் விதைப்பு. அறுவடைக் காலங்களில் அம்மா போய் வருவார். அவருடன் நானும் சென்றிருக்கின்றேன். அரிவி வெட்டுப் பார்த்திருக்கிறேன்.

அம்மாவும் அரிவி வெட்டுவார். நல்ல உழைப்பாளி. அரிவி வெட்ட வயலுக்குள் இறங்கிவிட்டால் ஒரே குதூகலமாக இருக்கும். எனக்குப் பாட்டுக் கேட்பதில் ஆசை. வரம்பில் குந்தி இருந்து கொண்டு நடப்பவை அனைத்தையும் ரஸனையுடன் அவதானித்துக் கொண்டிருப்பேன். அனேகமாக அந்த ஊர்ப் பெண்கள் தான் வயலில் அறுவடை செய்வார்கள். ''தொடுத்த மாலையும் தோள் மேலே தொங்கலும் படுத்த பாயிலே பாலனும் நானுமாய்''... என அம்மா பாடிய அருவி வெட்டுப் பாடலில் இரண்டு அடிகள் இன்னும் ஞாபகம். ஒரே கொண்டாட்டமாக இருக்கும்.

***எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் நூலிலிருந்து.***

## தாயை வணங்குவதால் புண்ணியம்

***-கிருபானந்தவாரியார்-***

ஆறு தரம் பூமியை வலம் வருதலும், 16 ஆயிரம் தடவை காசியில் குளித்தலும், பல நூறு தடவை சேது ஸ்நானம் செய்தலும் இவற்றால் கிடைக்கும் புண்ணியம் தாயைப் பக்தி பூர்வமாக ஒரு தடவை வணங்கினால் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாலமான தாயுள்ளம்...

*-நீர்வை பொன்னையன்-*

ஆச்சி என்னை நீ பெற்று வளர்ப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாய்? எத்தனை நாட்கள் பட்டினி கிடந்திருப்பாய்? எவ்வளவு துன்பங்களை நீ மௌனமாக அனுபவித்திருப்பாய்? என் நிமித்தம் ஊரவர்களிடம் எவ்வளவு அளவிலா ஏச்சுப் பேச்சுக்களை அவதூறுகளைக் கேட்டு உனது உள்ளம் ஊமையாய் ரத்தக் கண்ணீர் வடித்திருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

உலகில் விசாலமானது சமுத்திரம்தான் என்பார்கள். அந்தச் சமுத்திரத்தையும் விட, ஏன் இந்தப் பிரபஞ்சத்தையும் விட விசாலமானது தாயுள்ளம்.

நீங்கள் எனக்காகச் செய்த பரித்தியாகங்களை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது.

. . . ஆச்சி உரக்கக் கூப்பிட்டபடியே செல்கிறேன். ஆச்சி ஆவலுடன் தலையை உயர்த்திப் பார்க்கிறா. எழும்ப முயற்சிக்கிறா, முடியவில்லை.

எனக்கு அதிர்ச்சி . கையிலிருந்த பெட்டி விழுகிறது. ''ஆச்சி'' அலறிக்கொண்டே ஓடுகிறேன். ஆச்சி படுத்தபடியே எனது முதுகை அன்புடன் தடவிக்கொடுக்கிறா.

எனது ஆத்மா ஓலமிட்டு அலறுகிறது. என்னால் வாய் திறக்க முடியவில்லை. ஆச்சியும் வாய் திறக்கவில்லை. அவவினுடைய கண்களில் அருவி பாய்கிறது.

மௌனம்.. எவ்வளவு நேரந்தான் அப்படியிருந்தோமோ?

*வேட்கை சிறுகதைத் தொகுப்பு*

*அழியாச் சுடர் சிறுகதையிலிருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் என்றால் அம்மாதான்...

*- சுதாராஜ்-*

அம்மாவிற்கும் தெரியாமலே கொழும்பிலிருந்து ஜேர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது. அது பற்றி அறிவித்த செய்தி அம்மாவிற்குப் பல மாதங்களுக்குப் பின்னர் கிடைத்தபோது 'எங்கெயெண்டாலும் தப்பியொட்டி உயிரோட இருந்தால் போதும் ராசா. நான் கும்பிட்ட தெய்வங்கள் கைவிடவில்லை. இஞ்சை வராதை! இளம் பிள்ளை. உண்டு இல்லையென்று ஆக்கிப் போடுவாங்கள்'' என்று தான் எழுதியிருந்தாள். அதற்குப் பின்னர் இத்தனை வருடங்களாக எழுதிய கடிதங்களிலெல்லாம் இதே வாசகங்களைத்தான் ஒரு பாட்டுப்போல எழுதுவாள். 'இஞ்சநாட்டு நிலைமைகள் படுமோசம். வரவேண்டாம். ''அம்மா தனிய இருக்கிறாளே என்ற கவலை எப்போதும் அவனை வருத்தியிருக்கிறது. இந்தத் தள்ளாத வயதில் அவள் ஒழுங்காகச் சமைப்பாளா... வேளாவேளைக்குச் சாப்பிடுகிறாளா என்றெல்லாம் கவலைகள் தோன்றும். இப்போது அக்காமாரும் அம்மாவுடன் இல்லை. திருமணம் முடிந்த பிறகு யாழ்ப்பாணத்தில் யுத்த நெருக்கடிகளும் அதிகரிக்க அவர்களும் அம்மாவை விட்டுப் பறந்து விட்டார்கள். அம்மா தனித்துப் போய்விட்டாள். வீட்டுக்குக் காவலாக.

''வீடு எப்பிடிப் போனாலும் போகட்டும் நீங்களும் இந்தப் பக்கம் வந்திட்டால் நல்லது ஏஜன்ட் மூலம் ஜேர்மனிக்கு வருகிற ஒழுங்குகளும் செய்யலாம்'' என அவன் அம்மாவிற்கு எழுதியிருக்கிறான். அம்மா அதற்குச் சம்மதிக்கவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பெற்றோரைப் போலவே பிள்ளை குட்டிகளை ஏதோ ஒரு வழியில் விட்டுவிட்டு, வீட்டுக்குக் காவலாகக் கிடந்தாள்.

''தம்பி!.... இது... நாங்கள் பிறந்து வளர்ந்த மண் இந்த வீடு வாசலை விட்டு எங்கை போறது? எல்லாரும் விட்டுட்டுப் போனால் வீடு பாழடைஞ்சு போகும். ஊரும் அழிஞ்சு போகும். வந்தான் வரத்தான் எல்லாத்தையும் கொண்டு போயிடுவாங்கள். நீ ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். இப்போதைக்கு இஞ்ச வரவும் வேண்டாம். நிலைமைகள் சீரடைந்த பிறகு வா!...''

நிலைமைகள் எப்போது சீரடையும். எப்போது போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைப் பார்ப்பது எனக் கவலை மேலிடும். அம்மா எழுதுவதை எழுதட்டும் அதைப் பொருட்படுத்தாது போய் வரலாம் என யோசித்திருக்கிறான்.

இலங்கையை விட்டுத் தூர இருந்தாலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயணமானது ஒவ்வொரு காலகட்டத்திலும் எவ்வளவு சிரமங்களுக்கு உள்ளானதாய் இருந்திருக்கிறது என்பதை அறிந்தே வைத்திருந்தான். கொழும்பு யாழ் பஸ்சேவை இருந்த நாட்களிலேயே எத்தனையோ சோதனைத் தடை நிலையங்கள். அவற்றால் வடிகட்டல்கள் என்ற பெயரில் பிடித்து வைத்தல்கள் (தம்பி! உன்ர வயசும் அப்படி!....இஞ்ச வந்து இவங்கட கையில மாட்டியிடாதை!) தொண்ணூறுக்குப் பின்னர் தரைப்பாதையும் தடையேற்பட சேறு சகதிகளுக்குள்ளாகவும் கடல்மார்க்கமாகவும் உலகத்தின் வேறு எங்கோ ஒரு மூலையில் உள்ள தேசத்திற்குப் போவது போல நிச்சயமற்ற பயணங்கள். கிளாலிக் கடலூடாக உயிருக்கு உத்தரவாதமில்லாது போய் வந்த பயணங்களைப் பற்றியும் பறிபோன உயிர்களைப் பற்றியும் கேள்விப்பட்டுமிருக்கிறான். செய்திகளாக அறிந்துமிருக்கிறான்.

எப்படியாவது அம்மாவைப் போய்ப் பார்க்க வேண்டுமென மனம் உந்தும் போதெல்லாம் இந்தப் பயணங்கள் பற்றிய பயம் வந்து தடுத்துவிடும். ஆனால் மனம் அடங்காது. அம்மாவிற்கு ஒரு வருத்தம் துன்பம் என்றால் யார் டொக்டரிடம் கூட்டிப் போவார்? இராணுவ நடவடிக்கைகளின் போது ஊரே இடம் பெயர்ந்த வேளைகளிலெல்லாம் அம்மா என்ன செய்திருப்பாள்? .. எங்கு ஓடியிருப்பாள்?... யாராவது உதவி செய்திருப்பார்களா, எனத் தனக்குள்ளேயே கனன்று வெந்து போயிருக்கின்றான். பிறகு அம்மாவிடமிருந்து ஒரு கடிதமாவது வந்து சேரும் வரை நிம்மதி குலைந்து போயிருக்கும்.

தன்னைப் பெற்று வளர்த்த அன்னையை அவளது வயோதிபத்தில் பக்கத்திலிருந்து உதவ முடியவில்லையே என்று வேதனை நெஞ்சைப் போட்டு உடைத்திருக்கிறது. சிறு வயதிலேயே அப்பாவை இழந்த பிறகு அம்மா தான் எல்லாமாக இருந்து அவனை ஆளாக்கியவள். அம்மாவைப் பார்க்காமல் இருக்கிறோமே.. என்ற குற்றம் மனதை உறுத்தும் போதெல்லாம் அம்மாதானே வரவேண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எழுதியிருக்கிறாள்!... எனத் தனக்குச் சமாதானமும் சொல்லிக் கொள்வான்.

கடவுள் என்றால் அவனுக்கு அம்மாதான் வருடக்கணக்கான காலங்கள் அம்மாவைக் காணாமலே பறந்திருக்கின்றன. ஆனால், கூட இருப்பது போன்ற உள்ளுணர்வு எப்போதுமிருக்கும். எந்தக் கருமங்களைச் செய்ய முன்னரும் அம்மாவை நினைத்துக் கொள்வான். காலையில் எழுந்த உடனும் படுக்கைக்குப் போகும் முன்னரும் சாப்பிடும் போதும், இப்படி எல்லா நேரங்களிலும் அம்மாவை ஒரு தெய்வம் போல நினைத்து வணங்குவான்.

விட்டுப் போன ஆரம்ப காலத்தில் அம்மாவை நினைத்து அழுததுண்டு... சொல்லாமல் வந்துவிட்டேன். கடைசியாகப் பார்க்காமலும் வந்துவிட்டேனே!. வீட்டில் அம்மாவுடனிருந்த நினைவுகள் வரும். சாப்பாடு சரியில்லை. வாய்க்கு ருசியில்லை என அம்மாவுடன் சண்டை பிடித்திருக்கிறான். சாப்பாட்டைத் தள்ளிவிட்டு எழுந்திருக்கிறான்.

''தம்பி சாப்பாட்டை இப்படித் தள்ளக் கூடாது. சாப்பாட்டுக்கு மரியாதை கொடுக்கவேணும். எத்தினை சனங்கள் இந்த ஒரு வேளை சாப்பாட்டுக்கே வழியில்லாமலே தவிக்குதுகள்!.

ஜேர்மனிக்குப் போய் ஒரு பார்ட் டைம் வேலை கூடக் கிடைக்காத அந்த நாட்களில், ஒழுங்காக ஒரு வேளைச் சாப்பாடு கூடக் கிடைக்காத அந்த நேரங்களில் முகம் தெரியாத மனிதர்களின் முகங்களைப் பார்த்துப் பார்த்து யாரிடம் (வேலை) கேட்கலாம்? யார் உதவி செய்வார்கள்? என ஏக்கத்தோடு அலைந்த நாட்களில் அம்மா உலையில் வடிக்கிற கஞ்சியாவது கிடைக்காதா என வாடியதுண்டு.

*மல்லிகை ஆண்டுமலர் 2000*
*காற்றோடு போதல் சிறுகதையிலிருந்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா அம்மாதான்...

*-தெளிவத்தை ஜோசப்-*

கொழுந்து மடுவத்துக்கு இந்தப்பக்கமாக இரண்டு தேயிலைச் செடிகளின் இடைவெளிக்குள் ஒரு குறுக்குப்பாதை இறங்குகிறது. படிகள் கட்டப்பட்டு கல் பெயர்ந்து , பல் விழுந்த எகிறுபோல்...

அதன் வழியாகக் கீழே இறங்க வேண்டும். நின்று நெளிந்து ஒடிந்து திரும்பி இருநூற்றறுபது படிகள் இறங்கி விட்டால் அம்மா இருக்கும் லயம் வந்து விடும்.

. . . . . . . . . . . . . . .

வாசல்வரை வந்து பூவரச மரத்தடியில் அம்மா நிற்பார்கள்.தம்பியின் பிள்ளைகள் பின்னால் நிற்கும். தம்பி பட்டியில் இருப்பான் - ஏதாவது நோண்டிக்கொண்டு.

"பாத்து, பாத்துப்பா!... பாத மாதிரியா இருக்கு?...... அட மழயில மண்ணெல்லாம் அரிச்சிக்கிட்டு போயிறுச்சி!...... பொந்துக்குள்ளாற ஏதுங் கால விட்டுக்குறாம!.... " என்று குரல் கொடுத்தபடி இரு கைகளையும் நீட்டிக்கொண்டு அவர்களை வரவேற்கும் அம்மா..... வயதால் பாதியும் குளிரால் மீதியுமாகச் சுருங்கித் தொங்கும் தோல்களுடன் அந்த முகம், அந்தக் கைகள்!....

அள்ளி அணைத்துக்கொள்ளும் அந்தக் கைகளின் சில்லிர்ப்பு இவனுடலுடன் இழைய, அப்படியே அலாக்காக அம்மாவைத் தூக்கி ஒரு சுற்றிச் சுற்றி உள்ளே நுழைந்துவிடுவான்.

. . . . . . . . . . . . . . .

பின்னால் நிற்கும் சின்னதுகள் பேந்தப் பேந்த முழிக்கும்.

"விடுப்பா விடு!,,, நான் புள்ளயக் கொஞ்சணும்! என்று தன்னை விடுவித்துக்கொண்டு வெளியே திரும்புகையில் மருமகளும் கொழும்புப் பேத்தியும் லயத்துக்குள் நுழைவார்கள்.

மருமகளின் நெத்தியில் கைகளை வைத்துக் கன்னம் வழி தாவாய் வரை உருவி நெற்றிப் பொட்டில் விரல்களை நெரித்துப் படபடவென்று முறித்துக்கொண்டு "பாத்தியா எவ்வளவு திருஷ்டி என் செல்லத்திற்கு! " என்றபடி துணிகளை இழுத்துக் கொடியில் போட்டுவிட்டு நாற்காலியை இழுத்துப்போட்டு "இரும்மா!" என்பார்கள். கொழும்புப் பேத்தியின் ஆப்பிள் கன்னங்களை தனது கைக்குள் அடக்கி அப்படியே இழுத்து நெஞ்சோடு அணைத்துக் கொள்வார்கள். பேத்தி 'ஹுய்!' என்று கத்துவாள். "பாட்டி கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிருதம்மா?' என்பார்கள் சிரித்தபடி . ''குத்துது'' என்பாள் பேத்தி.

தம்பியின் மனைவி ஆவி பறக்கப் பறக்க தேனீர் கிளாஸ்களுடன் வந்து நிற்பாள். . . . அம்மா தேனீர் கிளாஸ்களை எடுத்துக்கொண்டு அடுப்படியை நோக்கி நடப்பார்கள்.

அந்த வயதிலும் அந்தக் குளிரிலும் அம்மா சிட்டைப்போல் பறப்பதாகத் தெரியும் அவனுக்கு. உழைத்து உரமேறிய உடல். சீக்கிற்கோ தளர்விற்கோ அது இடமளிக்காது. அவனுடைய வருகையும் அவளுக்கு ஒரு புதுத்தெம்பைக் கொடுக்கிறது. உடலிலே ஒரு இளமை. நடையிலே ஒரு துள்ளல்.

. . . . . . . . . . . . . . .

அம்மாவின் அன்புப்பார்வை அவனைத் தடுமாறச் செய்கிறது.

அம்மாவிற்கென்று அவன் என்ன செய்திருக்கிறான்?. படித்துப் பாஸாகி உத்தியோகம் தேடிக் காதலித்துக் கல்யாணம் கட்டிக் குழந்தை குட்டி பெற்று...

. . . . . . . . . . . . . . .

என்மகன் இப்படி இப்படி இருக்கிறான் என்று கூறிப் பெருமைப்படும் நெஞ்சம் அது! எனக்கு என்ன செய்தாய் என்று எதிர்பார்க்கும் நெஞ்சமல்ல , இப்படி ஒரு நாள் வருவதும் ''இனி எப்பப்பா ? ... என்னும் கேள்வியுடன் விடை பெறுவதும்தான் அவன் செய்வது!

இந்த வருகைதான் அந்தத் தாயுள்ளத்தை எப்படி ஆட்கொண்டுவிடுகிறது.!

அம்மாவுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்னும் உறுத்தலில் ஒரு தடவை கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போனான் தன்னுடன் வைத்துக்கொள்ள.

. . . . . . . . . . . . . . .

தான் பிள்ளைகக்குச் செய்ய வேண்டும் என்பதைத் தவிரப் பிள்ளைகள் தனக்குச் செய்யவேண்டும் என்னும் எதிர்பார்ப்பு இல்லாதவள் தாய்.!

நம்மைச்சுற்றி ஆயிரம்பேர் இருக்காலம். அன்பைச் சொரியலாம். ஆனால் யாரும் அம்மாவாக முடியாது! அம்மா அம்மாதான.

*முகில் ,செப் - ஒக்ரோ 05*
*'அம்மா' சிறுகதையிலிருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாசம்

*சில உண்மைச் சம்பவங்கள்..*

கடவுள் எங்கும் இருக்க முடிவதில்லை. அதனால் தான் தாயை உண்டாக்கினார் என்கிறது ஒரு யூதப் பழமொழி. அந்தத் தாய் தன் குழந்தைகளுக்காக தன் உயிரையே கொடுக்கத் தயாராக இருப்பாள். தாய்ப் பாசத்தின் வலிமையையும் ஆழத்தையும் அளவிட்டுக் கூற முடியாது. எப்போதும் விழிப்புடன் இருக்கும் தாயை இயற்கையின் அன்புப் பிரதிநிதி என்றே கூறுவார்கள். தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்றும் நாம் கூறுவதும் இதனால்தான் தாய் தனது குழந்தைக்காக எதையும் செய்வாள்.

இத்தாலியில் ஒரு சிறு நகரம் அது. 1970 ஆம் ஆண்டு ஒரு சர்க்கஸ் கம்பெனி முகாமிட்டு தினமும் நிகழ்ச்சிகள் நடத்திக் கொண்டிருந்தது. ஒரு நாள் அந்த சர்க்கஸ் முகாமிலிருந்து ஒரு சிங்கம் தப்பியோடி நகரில் புகுந்தது. தெருவில் தனியாக வந்து கொண்டிருந்த ஒரு சிறுவனை அது துரத்த ஆரம்பித்தது. அந்தச் சிறுவன் அலறி அடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தான். தனது மகனின் அலறல் குரலைக் கேட்டு பதறிப் போய் வெளியே வந்த தாய், சிங்கம் ஒன்று அவனைத் துரத்துவதைக்கண்டு திடுக்கிட்டாள்.

மகனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்ற வெறி அவளுக்கு ஏற்பட்டது. கையில் கிடைத்த கழி ஒன்றை எடுத்துக் கொண்டு அந்தச் சிங்கத்தைக் கண்மூடித் தனமாகத் தாக்க ஆரம்பித்தாள். எதிர்பாராத தாக்குதலினால் அதிர்ச்சி அடைந்த சிங்கத்திற்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. சிங்கத்திற்குப் பல வாரங்கள் மருத்துவ சிகிச்சை அளித்து அதன் அதிர்ச்சியைப் போக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

ஆர்மீனியாவில் வடக்குப் பகுதியில் 1988 ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி காலை 11-40க்கு கடும் நில நடுக்கம் ஏற்பட்டது. ஏராளமான கிராமங்களும் நகரங்களும் அடியோடு அழிந்தன. ஆர்மீனியாவின் இரண்டாவது பெரிய நகரான லெனினேக்கன் பலத்த பாதிப்பிற்கு உள்ளாகியது. மூன்றில் இரு பங்குப் பகுதி அடியோடு நாசமாயிற்று. ஏராளமான கட்டடங்கள் தரைமட்டமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடிபாடுகளில் ஏராளமானவர்கள் சிக்கிக்கொண்டனர். மீட்புப் பணிகள் பல நாட்கள் இரவும் பகலும் தொடர்ந்தன. இனி இடிபாடுகளுக்கடியில் யாரும் உயிரோடிருக்க மாட்டார்கள் என்ற எண்ணம் மீட்புக் குழுவினரிடம் வலுப் பெற ஆரம்பித்தது. உயிரோடு இருப்பவர்களைத் தேடும் பணியை நிறுத்திவிட்டு இடிபாடுகளை அகற்றும் பணியில் முழு வீச்சுடன் இறங்க முடிவு செய்தனர்.

கடைசி முயற்சியாக ஒரு கட்டடத்தின் இடிபாடுகளைக் கவனமாக அகற்றும்போது ஒரு தாய் தனது மூன்று வயதுக் குழந்தையோடு உயிரோடு இருப்பதைக் கண்டு பிடித்தனர் மீட்புக் குழுவினர். எட்டு நாட்கள் இடிபாடுகளுக்கடியில் பெரியவர்கள் உயிரோடு இருப்பதே மிகவும் அதிசயம். அதுவும் மூன்று வயதுக் குழந்தை, நீரோ ஆகாரமோ இல்லாமல் உயிருடன் இருந்தது. அதிசயத்திலும் அதிசயம். அந்தக் குழந்தை பசியால் இறந்து விடாமல் இருக்க தாய் தன் ரத்தத்தையே அதற்குப் புகட்டியிருக்கிறாள். தன் விரல்களை குத்திக் குத்தி ரத்தத்தை எடுத்துக் குழந்தைக்கு ஊட்டி வந்திருக்கிறாள்.

*நம்ப முடியாத உண்மைகள் நூலிலிருந்து.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மை

*-பகவான் சத்ய சாயி பாபா-*

பண்டைக் காலம் தொட்டே தாய்மார்கள்தானே குழந்தைகளைப் போற்றி போஷித்து வளர்த்து வருகின்றார்கள். தாயின் மடிதான் குழந்தையின் பள்ளிக்கூடம். அதனால் தான் வேதங்கள் உரைக்கின்றன. ''தாயே உனது கடவுளாகட்டும், தந்தையே உனது கடவுளாகட்டும், உனது குருவும் உன் கடவுளாகட்டும்'' ஆகையால் எப்போதும் தாய்க்கே முதல் மரியாதை தரப்படுகிறது. கடவுளர்களின் பெயர்களை எடுத்துக் கொண்டாலும், சீதாராமா, ராதாகிருஷ்ணா, பார்வதி பரமேஸ்வரன் என பெண்மை முதலில் போற்றப்படுகின்றது. தாய் தான் தன் குழந்தையின் வாழ்க்கையை உருவாக்குபவர். குழந்தை செய்த தவறுக்கு அதற்கு தண்டனை அளித்தாலும் அதையும் அவள் அன்புடன் தான் செய்வாள். அவள் எண்ணம் மட்டும் குழந்தையை நல்ல பாதைக்கு இட்டுச் செல்வது தான். நமக்கு அத்தகைய தாய்மார்கள் தான் இன்றையத் தேவை.

''இந்தப் புனித பாரதத் திருநாட்டில் பொறுமை தான் நமது பொக்கிஷம்.

எத்தனை விரதங்கள் செய்த போதும், ஸத்யத்தை விடாமல் பற்றிக் கொண்டிருப்பதுதான் பெரிய தவம். நமது நாட்டின் இனிய உணர்வுகளில் எல்லாம் மிகப் பெரிய இனிய உணர்வு தாயின் மேல் வைக்கும் அன்பு தான். தாய்மையை விடச் சிறந்ததும் புனிதமானதும் எதுவும் இல்லை. தாயின் ஆசைகளை நிறைவேற்றும் குழந்தைகள் தான் நமக்குத் தேவை. தாய்மையின் திருவடிவமாக விளங்கும் பெண்டிரும் வேண்டும்.

இத்தகைய உயர்ந்த எண்ணங்களை வளர்க்கத்தான் நாம் 19ம் தேதி நவம்பரைத் தேர்ந்தெடுத்து ''மகளிர் தினம்'' எனக் கொண்டாடுகிறோம். இந்த உடலின் தாய் ஈஸ்வரம்மா. அவள் படித்த பண்டிதையல்ல. அவருக்கு எழுத்துக்கள் கூடத் தெரியாது. இருப்பினும், அவள் வாழ்வின் நல்ல விஷயங்களையே பேசி வந்தாள். அவள் இதயம் முழுவதும் இரக்கம் நிரம்பியிருந்தது. ஒரு நாள் அவள் ஸ்வாமியை அணுகினாள். பிறகு கூறினாள். ''ஸ்வாமி இந்த ஊர்ப்பகுதியில் நிறைய பணக்காரர்கள் இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் நம் கிராமத்துக் குழந்தைகள் இங்கிருந்து நடந்து சென்று புக்க பட்டணம் போய்தான் பள்ளிக்கூடத்தில் படிக்க முடிகிறது. இத்தனை மைல்கள் நடக்கும் சிறிய குழந்தைகளைக் காணும் போது, எனது இதயம் வருத்தத்தால் துன்புறுகிறது. ஸ்வாமி! நமது கிராமத்தில் ஏன் ஒரு சிறிய பள்ளிக்கூடம் கட்டக்கூடாது? ''நான் பதில் சொன்னேன். ''என்னிடம் பணம் இல்லையே!'' அவள் உடனே தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை கழற்றி என்னிடம் கொடுத்து ''ஸ்வாமி, தயவு செய்து இதை விற்று ஒரு பள்ளிக்கூடம் கட்டுங்கள்''.

நான் பதில் கூறினேன். ''அவசரப்படாதீர்கள்! உங்களைப் பரிசோதிப்பதற்குத் தான் அவ்வாறு கூறினேன். நான் நிச்சயம் ஒரு பள்ளிக்கூடம் கட்டுகிறேன்.'' அதற்கு அடுத்த நாள், அடிக்கல் நாட்டப்பட்டது. மிகக்குறுகிய காலத்தில் பள்ளிக் கட்டிடம் தயாராகிறது. பிறகு நான் கேட்டேன். அவளுக்கு சந்தோஷமா என்று. அவள் முழுமையும் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை. உன் மனதை வேறென்ன துன்புறுத்துகிறது? அதற்கு அவள் பதிலளித்தாள். ''ஸ்வாமி, குழந்தைகள் நோய்வாய்ப்பட்டால், தாய்மார்கள் அவர்களைத் தூக்கிக் கொண்டு புக்கப் பட்டணம் ஓடுகிறார்கள். வழியில் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஆகவே இந்த கிராமத்தில் ஒரு சின்ன ஆஸ்பத்திரி கட்டுங்கள்'' இவ்வாறாக, அவள் எப்போதும் அடுத்தவர் நலத்தையும் மகிழ்ச்சியையுமே எண்ணி வந்தாள். அவள் அடிக்கடி கூறுவாள். ''இத்தகைய வசதிகள் எல்லாம் நம் கிராமத்தில் மட்டும் கிடைத்தால் போதாது. இவை நம்மைச் சுற்றியிருக்கும் அனைத்து கிராம மக்களுக்கும் கிடைக்க வேண்டும். ஒவ்வொருவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்''.

ஒரு முறை நான் ஈஸ்வரம்மாவை பிருந்தாவனுக்கு அழைத்துச் சென்றேன். அது சம்மர் கோர்ஸ் நடக்கும் நாட்கள். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் வந்திருந்தனர். நிறைய வெளிநாட்டவரும் கூட இருந்தனர். ஈஸ்வரம்மா, சம்மர் கோர்ஸில் மேன்மையான விஷயங்களைக் கற்றுத் தருவதையும், ஸ்வாமியின் மாலை நேர அருளுரைகளையும் கேட்டாள். ஒரு நாள் நான் அவளைக் கேட்டேன். ''நீ இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறாயா?'' அவள் கூறினாள். ''ஸ்வாமி! எனக்கு இதற்குமேல் என்ன தேவை? எத்தனையோ நாடுகளிலிருந்து வந்திருக்கும் மக்கள் எல்லாம் பயனடைகிறார்கள். இதுபோதும் என் சந்தோஷத்திற்கு'' அவளுக்குப் பரந்த மனம். இன்று நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதெல்லாம் குறுகிய மனங்கள்தான். தானும் தன் குடும்பமும் மட்டும் நலமாக இருக்கவேண்டும் என்ற வகையில் தான் மக்களின் ஆசை இருக்கிறது. ஆனால் ஈஸ்வரம்மா அப்படிப்பட்டவரல்ல. அவள் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என விரும்பினாள். அவள் படிக்காவிட்டாலும், மேன்மையான குணங்களை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவாள். நமது பாரத நாடு இத்தகைய தாய்மார்களால் அதிகப் புகழ் அடைந்தது. எத்தனையோ ஆடவரும் பெண்டிரும் ஒழுக்கத்தில் தலை சிறந்து விளங்கி இந்த தாய்த்திருநாட்டிற்கு புகழ் ஈட்டித் தந்திருக்கிறார்கள்.

ஒரு நாள் காலை உணவிற்குப் பிறகு அவள் கீழே ஹாலில் அமர்ந்திருந்தாள். ஸ்வாமி மாடியில் இருந்தேன். திடீரென அவள் கூப்பிட்டாள். ஸ்வாமி, ஸ்வாமி ஸ்வாமி!. (மூன்று முறை) நான் கூறினேன் ''நான் வருகிறேன். போகாதே'' அங்கிருந்த கோகக், நான் ஏன் அவ்வாறு சொன்னேன் என ஆச்சரியப்பட்டார். நான் உடனே விரைந்தேன். அவள் என் கைகளைப் பற்றிக் கொண்டு சொன்னாள்.

''இந்த ஸம்மர் கோர்ஸ் எனக்கு மிகவும் திருப்தியளித்தது. இதில் மாணவர்கள் மட்டும் பயனடையவில்லை. எனக்கும் கூட மனம் விசாலமாயிற்று. சுவாமி நான்போகிறேன்'' என அவள் என்னை நமஸ்கரித்தாள். அப்படியே அமைதியாக அடங்கிப் போனாள். எல்லோரும் அமைதியான மரணத்தையே விரும்புகின்றனர். கெட்ட எண்ணங்கள் கூடிய மனிதர்களுக்கு முடிவு அமைதியாக இராது. ஈஸ்வரம்மாவுக்கு சிறிதளவும் தீய எண்ணம் கிடையாது அதனால் தான் அவள் எப்போதும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

***19.11.2001***

***அன்று பகவானின் மகளிர் தின விழா***
***அருளுரையிலிருந்து***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை சாரதாதேவியின் அன்பு

*-சுவாமி ஆசுதேசானந்தா-*

நீ நேசிப்பவர் யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. எதையும் அவர்களிடம் கேட்காதே. நீ கேட்பதாக வைத்துகொள்வோம். சிலர் அதிகமாகத் தருவார்கள். சிலர் குறைவாகத் தருவார்கள். அதிகமாகத் தருபவர்கள் அதிகமாகவும் குறைவாகத் தருபவர்களைக் குறைவாகவும் நீ நேசிக்க நேரும். உன் அன்பு எல்லோரிடமும் சமமாக இருக்காது. எனவே நீ நேசிக்கிற யாரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காமல் இருந்தால் உன்னால் அனைவரையும் சமமாக நேசிக்கமுடியும்.

எத்தனை அற்புதமான வழி! தம்மை நேசிக்க வேண்டுமானால் சுற்றியிருப்பவர்களிடம் அன்பாக இருக்கவேண்டும் என்பதை எவ்வளவு கவிதை நயத்துடன் வெளிப்படுத்துகின்றார்.

அவர் வாழ்ந்து காட்டியதை நம் வாழ்வில் காட்டியதை சிறிய அளவிலேனும் வாழ வேண்டும். சேவை, சாதனை, தாய்மை, தவம் இவை எல்லாம் நம் வாழ்வின் அங்கமாக வேண்டும்.

இவ்வாறு உணர்வின் மூன்று நிலைகளும் இணைந்து செயல் படும்போது அன்னை கட்டாயமாக நம்மில் வெளிப்பட்டு தமது அருளை நிறைப்பார். தாம் சொல்ல வேண்டியதைச் சொல்வார். இதில் ஐயமில்லை.

## பத்ம வினோதின் கதை

பத்ம வினோதின் கதை நெஞ்சைத் தொடுவதாகும். அவனது இயற்பெயர் வினோத்விஹாரி சோம். இளம் மாணவனான அவன் படிப்புக்குப் பிறகு நாடகத்துறையில் புகுந்தான். எப்படியோ குடிப்பழக்கத்துக்கு அடிமைப்பட்ட அவனது வாழ்க்கை சீரழியத் தொடங்கியது. சுவாமி சாரதானந்தரின் அன்புள்ளத்தில் அவனுக்கு ஓர் இடம் கிடைத்தது. மெள்ளமெள்ள அவன் அவருக்கு நெருங்கியவன் ஆனான். அவரை நண்பா என்று அழைப்பான். நாடகம் முடிந்து அவன் திரும்பும் போது நள்ளிரவைத் தாண்டிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்துத் தள்ளாடியவாறே அவன் உத்போதனைக் கடந்து செல்லும் போது 'நண்பா ஓ நண்பா என்று சுவாமிகளை மீண்டும் மீண்டும் அழைப்பான். ஆனால் கதவைத்திறந்தால் அன்னையின் தூக்கம் கெடும் என்பதற்காக அவன் என்னதான் கத்தினாலும் யாரும் கதவைத் திறக்க வேண்டாம் என்று கூறியிருந்தார் சுவாமிகள். அவனும் சிறிது நேரம் கத்திப் பார்ப்பான் பிறகு போய் விடுவான். ஒரு நாள் இரவு அவனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ நண்பரை அழைத்து பயனில்லை என்று முடிவு செய்து ஒரு பாடல் மூலம் நேராக அன்னையையே தீனக்குரலில் அழைக்கலானன்.

கருணைக் கடலே என் அம்மா
எழுந்து கதவைத் திறவாயோ
இருளில் எதுவும் தெரியாமல்
என்னுளம் துடிப்பதை அறியாயோ!
உள்ளம் பதைத்திட உச்சசுவரத்தில்
எத்தனையோமுறை அழைக்கின்றேன்
கருணைக் கடலாம் மனம் இருந்தும்
இன்று அது ஏன் கரைய வில்லை?
பிள்ளையை வெளியில் விட்டுவிட்டு
நீ மட்டும் உள்ளே தூங்கலாமா?
அம்மா அம்மா என்று கதறிக் கதறி
இளைத்துப் போனேன் என் தாயே!
ராகம் தாளம் பல்லவி என்று
சுருதி கூட்டி இசை பாடி
எத்தனை முறையோ அழைத்தும்உன்
தூக்கம் கலைய மறுக்கிறதோ?
விளையாட்டினிலே மூழ்கி தினம்
வீணே காலம் கழிக்கின்றேன்
என்றே எண்ணி விட்டாயோ
முகத்தைத் திருப்பிக் கொண்டாயோ?
ஒருமுறை எனை நீ கடைக்கண்ணால்
கருணைபொங்கப் பார்த்து விட்டால்
மீண்டும்விளையாட்டில் மூழ்கமாட்டேன்
உன்னை விட்டுப் போக மாட்டேன்
கெட்டலைந்த என்போன்ற
பிள்ளைகளுடைய சுமைதனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே உருவாம் என் அம்மா
நீயன்றி வேறு யார் சுமப்பார்?

உணர்ச்சி பொங்க வினோத் பாடி முடிப்பதற்கும் மாடியில் அன்னையின் அறை ஜன்னல் திறப்பதற்கும் சரியாக இருந்தது. வினோத் தலையைத் தூக்கி மேலே பார்த்தான். கருணை பொழியும் கண்களுடன் அன்னை நிற்பது தெரிந்தது. அன்னையைக் கண்டதும் உணர்ச்சிப்பெருக்கினால் வாய் குளற அம்மா என் தாயே எழுந்து விட்டாயா? இந்தப்பிள்ளையின் குரலும் உனக்கு கேட்டுவிட்டதா? இதோ என் நமஸ்காரத்தை ஏற்றுக் கொள் என்று கூறியவாறே தெருவில் படுத்து உருண்டான். தெருப்புழுதியை அன்னையின் பாத தூசியாக பாவித்து அதனைத் தலையிலும் இட்டு கொண்டான் பின்னர் மீண்டும்

மனமே அன்னையைக் கவனமாகயுன்
இதயத்துள்ளே வைத்துக் கொள்
நீ மட்டும் அவளைப் பாத்திடுவாய்
வேறு யாரையும் அங்கே விடாதே!

என்று குதூகலத்துடன் பாடினான். பிறகு அன்னையைப் பார்த்தவாறே

நான் மட்டும் அவளைப் பார்த்திடுவேன்.

என் நண்பன் பார்க்காதிருக்கட்டும் என்று பாடிக்கொண்டே சென்று விட்டான். மறுநாள் காலையில் அன்னை வினோதைப் பற்றிய விபரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அதன் பிறகும் அவன் எப்போதாவதும் இப்படி ‘அம்மா’ என்று அழைத்தால் அது நல்லிரவாயினும் எழுந்து ஜன்னலைத் திறந்து அவனை ஆசீர்வதிப்பார். அதனை ஒருவர் தடுத்த போது, ‘‘இதோபார்’’ அவனும் என்பிள்ளை என்னால் அவனது தீனக்குரலுக்குச் செவிசாய்க்காமல் இருக்கமுடியாது என்று கூறிவிட்டார்.

*‘‘அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் வாழ்க்கை வரலாறு’’* நூலிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவ ஒழுக்கமுடைய அம்மா

*-மகாத்மா காந்தி-*

என் தாயாரைப்பற்றி நான் நினைக்கும் போது முக்கியமாக அவருடைய தவ ஒழுக்கமே என் நினைவுக்கு வருகிறது. அவர் மிகுந்த மதப்பற்றுக் கொண்டவர். தாம் செய்ய வேண்டிய அன்றாட பூஜையை முடிக்காமல் அவர் சாப்பிடமாட்டார். அவருடைய நித்தியக் கடமைகளில் ஒன்று விஷ்ணு கோயிலுக்குப் போய்த் தரிசித்துவிட்டு வருவது.

ஒரு தடவையேனும் சாதூர் மாச விரதத்தை அனுசரிக்க அவர் தவறியதாக எனக்கு ஞாபகம் இல்லை. அவர் கடுமையான விரதங்களையெல்லாம் மேற்கொள்ளுவார். அவற்றை நிறைவேற்றியும் தீருவார். நோயுற்றாலும் விரதத்தை மாத்திரம் விட்டுவிடமாட்டார். சாந்திராயண விரதமிருந்த போது அவர் நோயுற்றிருந்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் விரதத்தை விடாமல் அவர் அனுஷ்டித்து முடித்தார். தொடர்ந்து இரண்டு மூன்று உபவாச விரதங்கள் இருப்பதென்பதும் அவருக்குப் பிரமாதம் அல்ல. சாதுர்மாச காலத்தில் ஒரு வேளை ஆகாரத்தோடு இருப்பது அவருக்குப் பழக்கம். அது போதாதென்று ஒரு சாதுர்மாசத்தின்போது ஒன்றுவிட்டு ஒரு நாள் உபவாசம் இருந்து வந்தார்.

மற்றொரு சாதுர்மாச விரதத்தின்போது சூரியதரிசனம் செய்யாமல் சாப்பிடுவதில்லை என்று விரதம் கொண்டிருந்தார். அந்த நாட்களில் குழந்தைகளாகிய நாங்கள் வெளியில் போய் நின்று கொண்டு, சூரியன் தெரிந்ததும் தாயாரிடம் போய்ச் சொல்லுவதற்காக ஆகாயத்தைப் பார்த்தப்படியே இருப்போம். கடுமையான மழைக்காலத்தில் அடிக்கடி சூரியபகவான் தரிசனமளிக்கக் கருணை கொள்ளுவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. சில நாட்களில் திடீரென்று சூரியன் தோன்றுவான். தாயாருக்கு இதைத் தெரிவிப்பதற்காக ஓடுவோம். தாமே தரிசிப்பதற்காக அவர் வெளியே ஓடி வந்து பார்ப்பார். ஆனால் சூரியன் அதற்குள் மறைந்து, அன்று அவர் சாப்பிட முடியாதபடி செய்துவிடுவான். ''அதைப்பற்றிப் பரவாயில்லை'' என்று மகிழ்ச்சியோடு தான் தாயார் கூறுவார். ''நான் இன்று சாப்பிடுவதை பகவான் விரும்பவில்லை'' என்பார். பின்னர் வீட்டுக்குள் போய்த் தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தாயாருக்கு அனுபவ ஞானம் அதிகமாக உண்டு. சமஸ்தானத்தைப் பற்றி விவகாரங்களெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். அவருடைய புத்தித் கூர்மைக்காக ராஜ குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அவரிடம் அதிக மதிப்பு வைத்திருந்தார்கள். நான் குழந்தை என்ற சலுகையை வைத்துக் கொண்டு அடிக்கடி என் தாயாருடன் அரண்மனைக்குப் போயிருக்கிறேன். தாகூர் சாஹிபின் விதந்துவான தாயாருடன் என் தாயார் உற்சாகத்தோடு விவாதித்ததெல்லாம் எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.

*-சத்தியசோதனை நூலிலிருந்து.-*

## பாசத்தால் இணைக்கும் அன்னை

ஒரு இல்லம் உருவாக்கப்படுவது அன்னையால் தான். அத்தோடு அதைப் பேணிப் பாதுகாத்து குடுப்பத்தினரது மன உறைவிடமாகத் திகழ்ந்து தெம்பூட்டி வளர்த்துப் பாசத்தை ஊட்டிப் போஷித்து வளர்த்து வருதலையே தனது இலட்சியமாகக் கொண்டிருப்பார். வீட்டு அங்கத்தினரைப் பாசத்தால் இணைக்கும் மூலப் பொருளும் அன்னையே.

பிள்ளைகளுக்கு அன்புடன் அறிவையும் ஊட்டி, பொறுமை, கண்ணியம், சகிப்புத்தன்மை, ஊக்கம், போன்றவற்றை விளங்கவைத்து தவறு செய்தால் சுட்டிக்காட்டி நெறிப்படுத்துவதைத் தனது சிரமேற் பணியாகக் கொள்பவரும் அன்னையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே உனக்கு நான் ....?

*பட்டினத்தார்*

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாளளவும்
அந்திபக லாச்சிசுவை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலுந் தொட்டிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து- முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந்தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு:
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருகியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவ தரிசியே? தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்,
அன்னை யிட்ட தீ அடிவ யிற்றிலே
யானு மிட்டதீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்ப
லாகுதே பாவியே னையகோ! - காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை!

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ? சந்ததமும்
உன்னையே நோக்கி யுகத்து வரங்கிடந்தென்
தன்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்தா ளன்னை, வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தாள், இன்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
எல்லாரும் வாருங்கள்! ஏதென்றி ரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

## புத்தர் வசனம்

தாய் தன் குழந்தையை மட்டுமே பார்ப்பாள்
தாய் தன் உயிரையே பணயமும் வைப்பாள்
தாய் அன்பைப் போல எல்லையில்லா அன்பை
உலகில் தோன்றிய உயிரினம் மீது காட்டுங்கள்

*வண சிராவஸ்தி தம்பிக்கா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *CHILD'S ANGEL*

Once upon a time there was a child ready to be born.

One day the child asked God, "They tell me you are going to send me to earth tomorrow, but how am I going to live there being so small and helpless?"

God replied, "Among the many angels, I have chosen one for you. She will be waiting for you and will take care of you."

"But", said the child, "Tell me here in Heaven, I don't do anything else but sing and smile. That's what I need to be happy!"

God said, "Your angel will sing for you and will also smile for you everyday. And you will fell your angel's love and be happy."

"And", said the child, "how am I going to be able to understand when people talk to me, if I don't know the language that men talk?"

"That's easy", said God, "Your angel will tell you the most beautiful and sweet words you will ever hear, and with much patience and care, your angel will teach you how to speak."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The child looked up at God saying, "And what am I to do when I want to talk to you?"

God smiled at the child saying, "Your angel will place your hand together and will teach you how to pray."

The child said, "I've heard on earth there are bad men. Who will protect me?"

God put his arm around the child, saying, "Your angel will defend you – even if it means risking life!"

The child looked sad, saying, "But I will always be sad because I will not see you anymore."

God hugged the child, "Your angel will talk to you about me and will teach you the way to come back to me, even though I will always be next to you."

At the moment there was much peace in Heaven, but voices from earth could already be heard.


The child, in a hurry, asked softly, "Oh God, if I am about to leave now please tell me my angel's name!"

God replied, "Your angel's name is not importance……you will simply call her MOMMY!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



**எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக, வையத்துள்**
**வாழ்வாங்கு வாழ்ந்த, எங்கள் அன்புத் தெய்வம்**

## திருமதி.பரமேஸ்வரி கதிரவேற்பிள்ளை

**08.01.2003 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்களுக்கும் மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**அத்துடன் திடீர் நோயுற்றபோது வைத்திய சேவை புரிந்த வைத்தியர்களுக்கும், உதவி புரிந்த ஏனையவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**வணக்கம்**

இங்ஙனம்
***அன்புடன் கணவன்***
***மக்கள் , மருமக்கள்,***
***பேரப்பிள்ளைகள்,***
***பீட்டப்பிள்ளை***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ACKNOWLEDGEMENT

**The family member of the**

Late Mrs. ***Parameswary Kathiravetpillai***
Express their sincere gratitute and thanks to relatives, friends and all who attended the funeral, called over at their residence, sent messages of condolence, Doctors who attended and all those who helped in numerous ways during our recent bereavement. Regret inability to thank all individually.


13c, Fussels Lane,
Wellawatte.
07.02.2003.

M.Kathiravetpillai
*(husband)*
*Children,*
Dr.M.K.Muruganandan
S.Pankayatselvi
K.Balasoundari
K.Maheswaran
K.Manohar




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்தாய், அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எமது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org